# (மாதிரி வினாத்தாள்) இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு – 2022

**பதினோன்றாம் வகுப்பு** Reg.No:____________

நேரம்:**1.30** மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்:**50**

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10**

1. விதிப்பிழை எழுவது

(அ) ஒரு நடவடிக்கை முழுவதும் விடுபடும் போது

(ஆ) ஒரு நடவடிக்கை பகுதி விடுபடும் போது

(இ) முதலினம் மற்றும் வருவாயினத்தை வேறுபடுத்தாதபோது

(ஈ) பேரேட்டில் தவறாக எடுத்து எழுதுதல் மற்றும் தவறாகக் கூட்டும்போது

2. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்

(அ) விதிப் பிழைகள் (ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்

(இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள் (ஈ) பகுதி விடு பிழைகள்

3. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது

(அ) பகுதி விடு பிழை (ஆ) விதிப் பிழை

(இ) முழு விடு பிழை (ஈ) இருமுறை பதிந்த பிழை

4. கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது ,கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?

(அ) கொள்முதல் கணக்கு (ஆ) அனாமத்துக் கணக்கு

(இ) கடனீந்தோர் கணக்கு (ஈ) மேற்கண்டது ஏதும் இல்லை

5. நேர்க்கோட்டுமுறையில் தேய்மானத் தொகையானது,

(அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் (ஆ) ஆண்டுதோறும் குறையும்

(இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்

(ஈ) ஆண்டுதோறும் மாறக் கூடியது

6. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?

(அ) காலப்போக்கு (ஆ) பயன்பாடு

(இ) வழக்கொழிவு (ஈ) அ,ஆமற்றும்இ

7. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின்.......... அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.

(அ) ஆரம்பத்தில் (ஆ) இறுதியில்

(இ) மத்தியில் (ஈ) இவைகளில் ஏதுமில்லை

8. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

(அ) முதலினச் செலவு (ஆ) வருவாயினச் செலவு

(இ) நீள்பயன் வருவாயினச் செலவு (ஈ) மேற்கூறிய ஏதுவுமில்லை

9. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹20,000

(அ) தொடக்கச் செலவு (ஆ)வருவாயினச் செலவு

(இ) முதலினச் செலவு (ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

10. பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்.

(அ) முதலினச் செலவு (ஆ) வருவாயினச் செலவு

(இ) நீள்பயன் வருவாயினச் செலவு (ஈ) மேற்கூறிய ஏதுவுமில்லை

**பகுதி - ஆ**

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.(வினா எண்.17 கட்டாய வினா) 5×2=10**

11. பிழைத்திருத்தம் என்றால் என்ன?

12. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிட உதவும் சூத்திரங்கள் யாவை?

13. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?

14. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.

(அ) விற்பனை ஏட்டில் ரூ.100 குறைவாக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) கொள்முதல் ஏட்டில் ரூ.400 அதிகமாக் கூட்டப்பட்டுள்ளது.

15. ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?

16. ஒரு நிறுமம் ரூ.50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ரூ.5,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை, மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

17. பின்வரும் செலவுகளை முதலின, வருவாயினச் செலவுகள் என வகைப்படுத்துக.

(i) ரூ.3,200 பின்வருமாறு இயந்திரத்தின் மீது செலவழிக்கப்பட்டது.

(அ) உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க சேர்க்கப்பட்ட கூடுதல் இயந்திரத்தின் மதிப்பு ரூ.2,000.

(ஆ) கவனக்குறைவால் ஏற்பட்ட பழுதினைச் சரி செய்ய ரூ.1,200 செலவழிக்கப்பட்டது.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

## பகுதி - இ

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.(வினா எண்.24 கட்டாய வினா) 5×3=15**

18. அனாமத்துக் கணக்குப் பற்றிக் குறிப்பு எழுதவும்.

19. நிலைச்சொத்து ரூ. 50,000 வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15%. குறைந்த செலவில் இருப்பு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மான தொகை கணக்கிடவும்.

20. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு என வேறுபடுத்தவும்.

21. பின்வரும் நடவடிக்கைகளை முதலில் மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.

(i) சரக்கு விற்பனை வாயிலாக பெற்றது ரூ. 75,000.

(ii) வங்கியிடமிருந்து பெற்ற கடன்ரூ.2,50,000.

(iii) முதலீடு விற்பனை செய்தது ரூ.1,20,000.

22. ஜனவரி 1 2016 அன்று ரூ. 50,000 சொத்து ஒன்று வாங்கப்பட்டது. ஆண்டுதோறும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட வேண்டும். அச்சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள் மற்றும் அதன் இறுதி மதிப்பு ரூ.10,000 கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்படுகின்றன. தேய்மான விகிதம் கணக்கிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

23. இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

**(**அ)கொள்முதல் ஏட்டில் ரூ.10,000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) அறைகலன் பழுது பார்ப்ப செலவு ரூ. 500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) அகில்நிலவனுக்குகடனுக்குரூ.456 க்குசரக்குவிற்றதுஅவர்கணக்கில்ரூ.654 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

24. ஒரு பக்க பிழைகள் மற்றும் இரு பக்க பிழைகள் பற்றி குறிப்பு எழுதவும்.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3×5=15**

24. (அ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

**(அல்லது)**

(ஆ) தேய்மானம் கணக்கிடுதலில் நேர்கோட்டு முறை, குறைந்து செல் மதிப்பு முறை இடையே உள்ள வேறுபாடுகளை பட்டியலிடுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

25. (அ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.

**(அல்லது)**

(ஆ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம்என வகைப்படுத்தவும்.

(i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ரூ.10,000.

(ii) தொழிலாளர் நலனுக்காக செய்த செலவு ரூ.5000.

(iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்பு செலவுரூ. 2000.

(iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவுரூ.3000

(v) ஆலை வாடகை செலுத்தியது ரூ.12000.

26. (அ) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளை திருத்துவதற்கான குறிப்பேடு பதிவுகளை தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாக கருதவும்.

(அ) விற்பனை எட்டில் மொத்தம் ரூ. 2000 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) இயந்திரம் ரூ. 3000க்கு கொள்முதல் செய்தது கொள்முதல் ஏட்டில் பதியப் பட்டுள்ளது.

(இ) மதி க்கு ரூ.45க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில் ரூ. 54 என எடுத்து எழுதப் பட்டுள்ளது.

(ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ. 200 அதிகமாக கூட்டப் பட்டுள்ளது.

(உ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ரூ.1,122 பேரெட்டில் ரூ. 1,222 என எழுதப்பட்டுள்ளது.

**(அல்லது)**

(ஆ) ஜனவரி 1 2015 அன்று வெளிநாட்டிலிருந்து கொதிகலன் ஒன்று ரூ. 10,000க்கு வாங்கப்பட்டது. கப்பல் ஏற்றுக் கட்டணம் ரூ.2000, இறக்குமதி வரிரூ. 7000 மற்றும் நிறுவுதல் செலவிற்காக ரூ.1,000 செலவிடப்பட்டது. குறைந்துசெல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் எனக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும். கணக்குகள்ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப்படுகின்றன. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திர கணக்கு தயாரிக்கவும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593